# மாலைக்கதிர்

Maalaikkathir


சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 31 செவ்வாய்க்கிழமை 15.07.2025 கதிர் 255









இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

## வடக்கு காணிகளின் உரிமையாளர்கள் கொழும்பில் இன்று பெரும் போராட்டம்

கொழும்பு, ஜூலை 15

வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். வலிகாமம் வடக்கின் காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாணத்தில்

7

# மஹிந்தவின் அருமை தற்போது புரிகின்றது

## இப்படிச் சொல்கின்றார் ரோஹித எம்.பி.



களுத்துறை, ஜூலை 15

தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளால் மஹிந்த ராஜபக்ஷவுக்கான மவுசு எகிறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"அன்றும், இன்றும், என்றும் எனது அரசியல் தலைவர் மஹிந்த ராஜபக்ஷதான். சிலிண்டரில் நான் வாக்குக் கேட்ட வேளையிலும் இதனைப் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். மஹிந்த போன்றதொரு அரசியல் தலைவர் மீள உருவாகப்போவதில்லை. தற்போதைய அரசின் செயற்பாடுகளால் மஹிந்தவுக்குரிய பெறுமதி அதிகரித்துள்ளது.

7



## எங்களுக்குள்ள அதிகாரங்களை கையகப்படுத்தி முன்னேறுவோம்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த அரசாங்கங்களைப்போலவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றது என்றும், தற்போதைய சூழலில் நாம் எமது நீண்ட போராட்டத்தின் விளைவாக எமக்குக் கிடைத்த மாகாண சபையைக் கையகப்படுத்தி அதன் அதிகாரங்கள் போதாது என்பதைச் சகலருக்கும் தெரிவித்து எமது இலக்கை நோக்கி நகர்வதே புத்திசாதுர்யமான செயற்பாடாகும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ். க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனை வலியுறுத்தும் வகையில்

7

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த

## மொஹமட் சுஹைல் பிணையில் விடுதலை



கொழும்பு, ஜூலை 15

சமூக ஊடகப் பதிவில் இஸ்ரேல் எதிர்ப்புப் பதிவொன்றைப் பதிவு செய்தமைக்காக 9 மாதங்களாகப் பயங்கரவாதத் தடைச்

7

## யாழில் இளைஞர் ஒருவர் மீது கொலைவெறித் தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜூலை 15

ஜேர்மன் நாட்டில் இருந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்துள்ள நபர் ஒருவர் 10 பேர் கொண்ட கும்பலுடன் சேர்ந்து இளைஞர் ஒருவரை மூர்க்கத்தனமாகத் தாக்கியதில், தாக்குதலுக்கு இலக்கானவர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஈச்சமோட்டை பகுதியைச்

7

## கொழும்புத்துறையில் இன்று பெற்றோல் குண்டுத் தாக்குதல்



யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம், கொழும்புத் துறைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் பெற றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 5 மணி

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தேசிய கணக்காய்வு அலுவலகம் ரயில்வே மீது குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜூலை 15

ரயில்வே தகவல் தொடர்பு அமைப்பை மேம்படுத்தும் திட்டம் தற்போது திறம்பட செயல்படுத்தப்படவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் குற்றம்சாட்டியுள்ளது.

ரயில்வே சேவையின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஆராஃம்பிக்கப்பட்ட ரயில்வே தகவல் தொடர்பு அமைப்பை நவீனமயமாக்கும் திட்டம் 2020 நவம்பரில் நிறைவு பெற்றது.

எனினும் குறித்த திட்டம் எதிர்பார்த்த பலனை அடையவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் குற்றம்சாட்டியுள்ளது.

ரயில்வே தகவல் தொடர்பு அமைப்பை நவீனமயமாக்கும் இந்த திட்டம் நாடு முழுவதும் ரயில்வே சேவையின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேலைநிறுத்தத்திற்கு தயாராகும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி!

கொழும்பு, ஜூலை 15

இன்று (15) நள்ளிரவு 12 மணி முதல் நாடு தழுவிய தபால் நிலையங்கள் மற்றும் நிர்வாக அலுவலகங்களில், மேலதிக நேர வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.

தபால் துறையில் 2016ஆம் ஆண்டு முதல் முறையான ஆட்சேர்ப்பு நடைபெறாமையே இந்தப் போராட்டத்தின் முக்கிய காரணம் எனது தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஏற்பட்ட பணியாளர் பற்றாக்குறை, தற்போதைய ஊழியர்கள் மீது அதிக வேலைப்பளு மற்றும் மேலதிக நேரப் பணி அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவிக்கின்றது.

எனவே ஆட்சேர்ப்பு உள்ளிட்ட நிலுவையிலுள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாவலரின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 15

பாதுகாவலரின் கீழ் உள்ள குழந்தைகள், நிறுவன பராமரிப்பு மற்றும் வீதியோரக் குழந்தைகளுக்கு 5,000 ரூபா உதவித்தொகை வழங்கும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படும் என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தின் மூலம் 9,191 குழந்தைகள் பயனடைவார்கள் என்று அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவரின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியுள்ளது

கொழும்பு, ஜூலை 15

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நபர் ஒருவரை போக்குவரத்து பொலிஸார் துரத்திச் சென்று அவரது வாகன சக்கரத்தில் (சில்லில்) தடி ஒன்றினால் தடையினை ஏற்படுத்திய காரணத்தால் குறித்த நபர் சம்பவ இடத்துலேயே உயிரிழந்திருந்தார்.

இதன்போது போக்குவரத்து பொலிஸாரே குறித்த மரணத்திற்கு காரணம் என குறித்த பகுதி மக்கள் தெரிவித்து குழப்பத்தில் ஈடுபட்டதுடன், மரணம் தொடர்பில் விசாரணை செய்ய சென்ற பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதற்குபின்னர்நிலைமையைசுமுகமாக்கி சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி எம்.டீ.ஆர். நாயக்கரத்னே முன்னிலையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனையின் படி, மரணித்தவரின் உடலில் புதிய காயங்கள் எதுவும் இல்லை எனவும், வலது காலில் பழைய வடுக்கள் காணப்படுகின்றது எனவும், இதயத்தின் முன் புறப்பகுதியில் கடுமையான இரத்த உறைவு உருவாக்கம் காணப்படுகின்றது, எனவும் இதயத்தின் தசைப்பகுதி மற்றும் இரத்த மாதிரி கொழும்புக்கு இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மாரடைப்பு காரணமாகவே அவர் மரணமடைந்துள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி எம்.டீ.ஆர்.நாயக்கரத்னே தெரிவித்துள்ளார்.



# ஊழிய, ஊதிய சட்டத்தில் திருத்தம்




கொழும்பு, ஜூலை 15

ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், திங்கட்கிழமை (14) கூடிய வாராந்த அமைச்சரவையில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1954 ஆம் ஆண்டின் 19 இலக்க கடை அலுவலக ஊழியர்களின் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் மூலம் கடை அலுவலக ஊழியர்களின் சேவை வசதிகள், சேவைக்காலம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்துக்கமைய தொழில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அமுலிலுள்ள ஒழுங்குவிதிகளின் கீழ் 18 வயதுபூர்த்தியடைந்த ஒரு பெண் ஊழியர் தங்குமிட ஹோட்டலில் வரவேற்பு அலுவலரின், பெண்கள் அங்கி அறை ஊழியரின், பெண்களின் ஆடை அறை ஊழியரிகளின் அல்லது பெண்களின் மலசலகூட ஊழியரின் கருமங்களில் பிற்பகல் 6.00 மணிக்கு பின்னர் மற்றும் முற்பகல் 6.00 மணிக்கு முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்படலாம். இருந்த போதிலும் வதிவிட ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணியில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் பானங்களை வழங்கும் பெண் ஊழியர்கள் இரவு 10.00 மணிவரை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படலாம் என்பதனால், குறித்த நடவடிக்கை செயற்பாடுகளை பேணும் போது பல்வேறு சிக்கல் நிலை தோன்றலாம் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, தங்குமிட ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணியில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் பானங்களை வழங்கும் கருமங்களில் ஈடுபடும் 18 வயதுக்கு கூடுதலான பெண் ஊழியர்கள் பிற்பகல் 6.00 மணிக்குப் பின்னரும், முற்பகல் 6.00 மணிக்கு முன்னரும் பணியில் ஈடுபடக்கூடிய வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 இலக்க கடைஅலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும்ஊதியத்தையும்ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 3 ஆவது ஒழுங்குவிதியை திருத்தம் செய்வதற்காக தொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# சப்ரகமுவ பல்கலைக்கழக முறைகேடுகள் குறித்து விசாரணை




கொழும்பு, ஜூலை 15

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடந்ததாகக் கூறப்படும் நிர்வாக மற்றும் நிதி முறைகேடுகள் குறித்து விசாரிக்க கல்வி அமைச்சகம் ஒரு சுயாதீன விசாரணைக் குழுவை நியமித்துள்ளது.

பல்கலைக்கழகம் தொடர்பாக பொது நிறுவனங்கள் குழு (COPE) வழங்கிய பரிந்துரைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவாவால் நான்கு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவிற்கு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி விஜித் கே. மலல்கொட தலைமை தாங்குகிறார். ரு/ஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் காமினி சேனநாயக்க, தேசிய வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் டபிள்யூ.எம்.சி. பண்டார ஆகியோர் மற்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் உதவி உள்ளக தணிக்கையாளர் திருமதி ஹசந்தி பத்திரண, ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழு 60 நாட்களுக்குள் அமைச்சகத்திடம் விரிவான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. (ஐ)

# சுற்றுலா விசாவில் நுழைந்து தொழில் ஈடுபட்ட 10 வெளிநாட்டவர்களை நாடு கடத்த திட்டம்!

கொழும்பு, ஜூலை 15

நாட்டிற்குள் சுற்றுலா விசாவில் நுழைந்து தொழில் ஈடுபட்ட 10 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியல்வுத் திணைக்கள அதிகாரிகளினால், கொழும்பு - 03 பகுதியில் அமைந்துள்ள மசாஜ் நிலையத்தில் நடாத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது நேற்று மாலை இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 25 முதல் 39 வயதுக்குட்பட்ட பெண்கள் ஆவர்.

குறித்த பெண்களில் ஆறு தாய் நாட்டினர், மூன்று வியட்நாமிய நாட்டினர் மற்றும் ஒரு சீன நாட்டவர் அடங்குவர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மிரிஹான தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை உடனடியாக அந்தந்த நாடுகளுக்கு நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் மாணவர்களின் தாக்குதலில் 9 பேர் வைத்தியசாலையில்

ஒலுவில, ஜூலை 15

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட 1ம் வருட மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 9 மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதியில் உள்ள தென்கிழக்கு வளாகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது செவ்வாய்க்கிழமை (14) இரவு அதே பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது காயமடைந்த 5 மாணவர்கள் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையிலும் ஏனைய 4 மாணவர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த மாதமும் முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒலுவில் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுவர் பூங்கா திறந்து வைப்பு



கொழும்பு, ஜூலை 15

உக்குவளை அல்மினா ஆரம்ப பாடசாலையின் சிறுவர் பூங்கா இப்பாடசாலையின் அதிபர் திருமதி எப். நிரோசியாவால் இப்பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப் பட்டது

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக உக்குவளை பிரதேச சபை உதவித் தலைவர் எஸ்.எம்.ராபி கலந்து கொண்டதுடன் பாடசாலை பிரதி அதிபர், அஜ்மீர் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

அஜ்மீர் பழைய(1997) மாணவர் சங்கமும் அல்மினா ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி சங்கமும் இணைந்து சிறுவர் பூங்காவை புனரமைப்பு செய்து கொடுத்திருந்தது

# சுண்டிக்குழியில் வீடு உடைத்து நகைகள் திருடியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வீடு உடைத்து நகைகள் திருடிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் நான்கு ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் – சுண்டிக்குழிப் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு தொகுதி நகைகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில், பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 42 வயதான இந்தச் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து வந்தபோது யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். திருடப்பட்ட நகைகள் சந்தேகநபரிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

# கார் விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஜூலை 15

மஹியங்கனையில் இருந்து ஒக்கம்பிட்டிய நோக்கி வியானி கால்வாய்க்கு இணையாக உள்ள வீதியில் பயணித்த கார், செவ்வாய்க்கிழமை (15) அதிகாலை மபாகட 17வது கட்டை பகுதியில் வைத்து கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இருவரும் உயிரிழந்ததாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

கால்வாயில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள் தற்போது மஹியங்கனை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வாணியம்பாடி தனியார் பல் மருத்துவமனையில் தொற்றால் 8 பேர் இறந்த விவகாரத்தில் மருத்துவ குழு ஆய்வு




வாணியம்பாடி தனியார் பல் மருத்துவமனையில் தொற்றால் 8 பேர் இறந்த விவகாரத்தில் மருத்துவ குழு ஆய்வு நடத்தி வருகிறது. திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் அறிவு பல் மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு, 2023ல் வாணியம்பாடி, நியூ டவுன் பகுதியைச் சேர்ந்த 10 பேர், பல் சிகிச்சைக்காக சென்றனர். அவர்களுக்கு டாக்டர் அறிவரசன் சிகிச்சை அளித்தார். சிகிச்சை பெற்ற 10 பேரில் எட்டு பேர், ஆறு மாத இடைவெளியில் அடுத்தடுத்து உயிரிழந்தனர். இதில், இந்திராணியின் மகன் ஸ்ரீராம்குமார், 32, தன் தாய்க்கு முறையாக பல் சிகிச்சை அளிக்காததால் உயிரிழந்தார் எனக்கூறி, வாணியம்பாடி டவுன் போலீஸ், மாவட்ட மருத்துவ இணை இயக்குநர், மாவட்ட கலெக்டர் மற்றும் தமிழக முதல்வர் அலுவலகத்திற்கு புகார் மனு அளித்தார்.

இருந்த நிலையில், மாவட்ட சுகாதாரத் துறை அதிகாரிகள் விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தனர். இதில், பல் சிகிச்சைக்காக, 'பெரியோஸ்டீயல் லிப்ட்' எனப்படும் கருவி பயன்படுத்தப்படுவது வழக்கம். இந்த மருத்துவமனையில், அசுத்தமான நிலையில் இருந்த அந்த கருவி பயன்படுத்தப்பட்டது தெரியவந்துள்ளது. அசுத்தமான கருவியில் இருந்த பாக்டீரியா, சிகிச்சையின்போது நரம்பு வழியாக மூளைக்கு சென்று, 10 பேரை தொற்றுக்குள்ளாக்கியது. அதில், எட்டு பேர், நியூரோ மெலியோய்டோசிஸ்' நோய் பாதிப்பு ஏற்பட்டு 8 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த எட்டு பேரும், மூளையில் ஏற்பட்ட ஒரே மாதிரி பாக்டீரியா தொற்றான நியூரோ மெலியோய்டோசிஸ் பாதிப்புக்குள்ளாகி உயிர் இழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இது வேலூர் சி.எம்.சி., மருத்துவமனை மற்றும் ஐ.சி.எம்.ஆர். என்.ஐ.இ., மற்றும் தமிழ்நாடு பொது சுகாதார இயக்குநரகம் உட்பட பல அமைப்புகளைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு நடத்திய விசாரணையில் உறுதி செய்யப்பட்ட நிலையில், சிகிச்சை அளித்த மருத்துவமனைக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த நிலையில், மூடப்பட்ட தனியார் பல் மருத்துவமனையில் மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குநர் தலைமையில் மருத்துவக் குழு ஆய்வு செய்து வருகிறது. (ஐ)

# திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுதுணையாக இருக்கும்



கடலூர் மாவட்டம் சிதம்பரம் லால்புரத்தில் எல். இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், " இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கம் அமைத்து கொடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம். இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை முன்னேற்றியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்தியாவிற்கே முன்மாதிரி ஆட்சியை நடத்தி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்தியாவிற்கே முன்மாதிரி திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

1931 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பட்டியல் இன மக்களின் கல்வி வளர்ச்சி விகிதம் 1.5 சதவீதம்தான். தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் வளர்ச்சி விகிதம் 78% ஆக உயர்ந்துள்ளது. விளிம்புநிலை மக்களை மேம்படுத்த கலைஞர் வழியில் திட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இன்று உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சிறப்பாக தொடங்கப்பட்டு உள்ளது. மக்கள் நலன்களில் அக்கறை செலுத்தும் அரசு திராவிட மாடல் அரசு. தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளில் 90%க்கும் மேல் திமுக அரசு நிறைவேற்றியுள்ளது. நடப்பாண்டு அயல்நாட்டில் பயில விண்ணப்பித்த அனைவருக்கும் நிதி கிடைக்க வேண்டும்.

விண்ணப்பித்த மாணவர்கள் அனைவருக்கும் கிடைத்திட, மேலும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். தோழமை கட்சிகளை எல்லாம் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து வழிநடத்தி வருகிறார் முதலமைச்சர். ஓரணியில் தமிழ்நாடு, திமுக அணியில் தமிழ்நாடு. திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய உறுதுணையாக விசிக இருக்கும். திராவிட மாடல் அரசு அமைய அனைத்து தமிழர்களும் ஓரணியில் இணைய வேண்டும். திமுக கூட்டணிக்கு விழும் கொத்து கொத்தான வாக்குகளில் 25% வி.சி.க. வாக்குகளாக இருக்கும்."இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# ரூ.6 கோடி முன்பணம் விவகாரம்: நடிகர் ரவிமோகன் பதில்தர சென்னை உயர்நீதிமன்றம் ஆணை



படத்தில் நடிக்க பெற்ற ரூ.6 கோடி முன்பணத்தை திரும்ப தரக்கோரி பாபி டச் கோல்டு யுனிவர்சல் நிறுவனம் தாக்கல் செய்த மனுவுக்கு நடிகர் ரவிமோகன் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் ரவி மோகன் தயாரிப்பில் உருவாக உள்ள படம் 'ப்ரோ கோட்'. ரவிமோகன் ஸ்டுடியோஸ் தயாரிக்கும் இந்த படத்தில் அவரே கதாநாயனாகனாக நடிக்க, எஸ்.ஜே.சூர்யா வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். வடக்குப்பட்டி ராமசாமி மற்றும் டிக்கிலோனா போன்ற படங்களை இயக்கிய கார்த்திக் யோகி இப்படத்தை இயக்குகிறார்.

இந்நிலையில், பாபி டச் கோல்டு யுனிவர்சல் நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், 2 படங்களில் நடிக்க நடிகர் ரவிமோகனுடன் கடந்த 2024ம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும், அதற்காக அவர் ரூ.6 கோடி முன்பணம் வாங்கியதாகவும் தெரிவித்த நிறுவனம், கால்ஷீட் கொடுத்தும் பணிகளை துவங்காததால் இழப்பு ஏற்பட்டதாக தெரிவித்திருக்கிறது. மேலும், அந்த பணத்தை சொந்த தயாரிப்பு, சொந்த செலவுக்கோ பயன்படுத்த வாய்ப்புள்ளதால், ப்ரோ கோட் படத்தை தயாரிக்க, வேறு நிறுவன தயாரிப்பிலும் நடிக்க ரவிமோகனுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் தெரிவித்திருந்தது. இந்நிலையில், இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பாபி டச் கோல்டு யுனிவர்சல் நிறுவனம் தாக்கல் செய்த மனுவுக்கு நடிகர் ரவிமோகன் பதிலளிக்க உத்தரவிட்டு, வருகிற 23ம் தேதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்திற்கென பிரத்யேக இணையதளம்




தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடு தேடி வரும் தமிழக அரசு திட்டங்களின் பயன்களை மக்கள் பெறும் வகையில், 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தை கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். சாதிச் சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம், ஆதார், ரேஷன் அட்டையில் திருத்தம் உள்ளிட்ட சேவைகள் இந்த திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. மேலும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின்கீழ் உங்கள் மாவட்டங்களில் முகாம் நடைபெறவுள்ள இடத்தின் விவரங்களை அறிய ஙவவிள:ஃஃ ரபெயடரனயளெவயடலை.வெ.பழஎ.லை என்ற பிரத்யேக இணையதளத்தை தொடங்கியுள்ளது தமிழ்நாடு அரசு. இந்த நிலையில், முதலமைச்சர் அவர்கள் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடங்கி வைத்து, ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, 3 கோரிக்கை மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டது.

காதொலி கருவி வேண்டி விண்ணப்பித்த சபரீஷ் என்ற மாற்றுத்திறனாளி பயனாளிக்கு காதொலி கருவியையும், மருத்துவ காப்பீட்டு அட்டை வேண்டி விண்ணப்பித்த திருமதி செந்தமிழ்செல்வி என்ற பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு அட்டையும், மின்சார இணைப்பு பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த பெருமாள் என்ற பயனாளிக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையினையும் முதலமைச்சர் வழங்கினார். மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். (ஐ)



# உணர்வுகளின் உலகம்!

பிருந்தா கதிர்



என்னிடம் பெரும்பாலானோர் கேட்கும் ஒரு கேள்வி, "உங்களுடைய மாதவிடாய் காலத்தை நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" என்பது.

இக்கேள்விக்கான பதிலை என்னுடைய சொந்த அனுபவங்களின் வாயிலாகவும், இன்னும் சில பார்வையற்ற பெண்களின் அனுபவங்களின் வாயிலாகவும், உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு பார்வையற்ற பெண் தன் முதல் மாதவிடாயை எதிர்கொள்ளும் விதம், அவள் எங்கே இருக்கிறாள் என்பதைப் பொறுத்து வேறுபடும். சிறப்புப் பள்ளிக ளில் இந்தப் பிரச்சினை இல்லை ஏனெனில், அங்குப் பிரத்தியேகப் பயிற்சிகள் மூசானிட்டரி நாப்கின்களை எப்படிப் பயன்படுத்துவது, மாதவிடாய் காலத்தில் எப்படி தன்னை சுத்தமாக வைத்துக்கொள்வது போன்றவை சொல்லிக் கொடுக்கப்படும்.

ஆனால், வீட்டில் வளரும் பெண்குழந்தைகளுக்கு இது நிச்சயம் சவாலான காரியம்தான். பொதுவாகவே, மாதவிடாய் என்றால் அசிங்கம், தீட்டு என்ற தவறான மனபோக்குதான் நம் சமூகத்தில் உள்ளது.

இந்தப் புரிதலற்ற நிலையில், பல பெற்றோர்கள் தங்கள் பார்வையற்ற மகளுக்கு முதல் மாதவிடாய் வந்தவுடன், அவர்களாகவே நாப்கினை வைத்துவிடுவார்கள். குழந்தைக்கு எதையும் சொல்லிக் கொடுக்காமல், 'இவளுக்குத் தெரியாது, நாம் பார்த்துக் கொள்ளலாம்' என்ற எண்ணத்தில் பள்ளிக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஆனால், இரண்டாவது மாதவிடாய் வரும்போதுதான் சிக்கல் தொடங்குகிறது. நான் முன்னரே குறிப்பிட்டதுபோல, பார்வையற்றவர்களுக்கான சிறப்புப் பள்ளிகள் விடுதிகளுடன் கூடியவை. இரண்டாவது மாதவிடாய் வரும்போது, அந்தக் குழந்தை ஒருவேளை விடுதியில் இருக்கலாம்.

அப்போது, நாப்கின் எப்படி வைப்பது, அதை எப்படி மாற்றுவது, என்று எதுவுமே தெரியாமல் அந்தக் குழந்தை தவிக்கும். ஏதோ தனக்குத் தெரிந்த அளவில் நாப்கினை வைத்துக்கொண்டு பள்ளிக்கு வரும். ஒரு கட்டத்தில், இரத்தப்போக்கு அதிகமாகி, அவள் அமர்ந்திருக்கும்போது, அவளுடைய உடை முழுவதும் கறைபட்டு, தரையிலும் படரும்.

அப்போது, அந்த இடத்தைச் சுத்தம் செய்ய வேண்டியவர்கள், அந்தக் குழந்தையை வார்த்தைகளால் எவ்வளவு அசிங்கப்படுத்த முடியுமோ அவ்வளவு அசிங்கமாகப் பேசுவார்கள். இந்தக் குழந்தைக்கோ, தான் என்ன தவறு செய்தோம், ஏன் இப்படி ஆனது என்று புரியாமல், தான் செய்த 'தவறு'க்காகப் பெரும் மன உளைச்சலையும் அவமானத்தையும் சந்திக்கும்.

இது அக்குழந்தையின் மனதில் பெரும் காயத்தை ஏற்படுத்தும். இந்தப் பிரச்னை, பார்வையற்ற பெண்களின் தன்னம்பிக்கையை அடியோடு தகர்க்கும் ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையாகும்.

இங்கு பெற்றோரின் அறியாமையும், சமூகத்தின் மாதவிடாய்குறித்த தவறான மனப்போக்கும் ஒன்றிணைந்து, ஒரு பார்வையற்ற பெண் குழந்தைக்கு இவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

என்னதான் பள்ளிகளில் நாப்கின் வைப்பது எப்படி என்று சொல்லிக்கொடுத்தாலும், மாதவிடாய் என்றால் என்ன? அது ஏன் வருகிறது என்பது குறித்த எந்த விழிப்புணர்வும் பார்வையற்ற பெண்களுக்கும் இந்தச் சமூகத்தில் சொல்லித் தரப்படுவதில்லை.

பள்ளிப் பாடத்திட்டத்தில் இது குறித்தத் தகவல்கள் இருந்தாலும், பெரும்பாலும் யாரும் அவற்றை எங்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில்லை. இங்கே என் தோழர் ஒருவரின் அனுபவத்தை அவரின் அனுமதியோடு உங்களுடன் பகிர விரும்புகிறேன்.

என் தோழர் தன்னுடைய இருபத்தொன்றாம் வயதில், 'பூப்படைதல் முதல் மெனோபாஸ் வரை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை இணையத்தில் வாசித்துள்ளார்.

அப்போது அங்கே வந்த அவரின் தாயார், ஏதோ தெரிந்துகொள்ளக் கூடாத ஒன்றை தெரிந்துகொள்ள முனைவதுபோல அவரிடம், "இதெல்லாம் இப்பயே தெரிஞ்சு என்ன செய்யப்போற? உனக்கென்ன அவ்வளவு ஆசையா? கல்யாணத்துக்கு அப்பறம் எல்லாம் தெரிந்து கொண்டால்போதும்" என்று முட்டாள்தனமாக கூறினாராம்.

யாரிடமும் கேட்டு தெரிந்து கொள்ளவும் கூடாது, தேடிப்படிக்கவும் கூடாது என்றால், சொற்களின் மூலமே உலகத்தை அறியும் எங்களுக்கு என்ன தான் வழி?

இந்த சமூகத்தின் தயக்கத்தால், மாதவிடாய் என்றால் என்ன என்று ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி தெரிவதில்லை. பார்வையுள்ள ஆண்களுக்கு, நாப்கின் விளம்பரங்களின் வழியாகவோ, பிறரை கவனிப்பதன் மூலமாகவோ மாதவிடாயை பற்றி ஒரு அடிப்படை புரிதலாவது இருக்கும்.

ஆனால், பார்வையற்ற ஆண்களுக்கு இந்த வாய்ப்பு முற்றிலும் கிடையாது. அவர்களுக்கு எல்லாம், 'பெண்களுக்கு மாதவிடாய் என்ற ஒன்று வரும்' என்பது மட்டும்தான் தெரியும். தங்கள் தோழியோ அல்லது மனைவியோ மாதவிடாயின் போது சிரமப்பட்டால், அவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது.

ஒருவேளை அவளுக்கு மாதவிடாய் காரணமாக ஏற்படும் மனநிலை மாற்றம் (Mood Swing) போன்ற பிரச்சினை ஏற்பட்டால்கூட, அது மாதவிடாய் சம்பந்தப்பட்டது என்று அவர்களுக்குப் புரியாமல் போகலாம். இந்த நிலை மாற வேண்டும்.

மாதவிடாய் குறித்துப் பொதுவெளியில் தெளிவாகப் பேச வேண்டும். இது பேசக் கூடாத விஷயம் அல்ல. பேசாததால்தான், பார்வையற்றவர்கள் உள்படப் பலரும் இந்தச் சமூகத்தின் தவறான புரிதல்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை, என் தந்தையும் பார்வையற்றவர் என்பதால், என் குடும்பத்தினருக்கு, எனக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற புரிதல் இருந்தது.

உடல் சோர்வு, வயிற்று வலி போன்ற அறிகுறிகளை வைத்து எனக்கு மாதவிடாய் வரப்போகிறது என்பதாக நான் புரிந்துகொள்வேன். மாதவிடாய் தொடங்கிவிட்டது என்றால், உள்ளாடையில் ஒருவித ஈரமான உணர்வு ஏற்படும். உடனடியாக கழிப்பறைக்குச் சென்று இரத்தப்போக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று தொட்டுப் பார்ப்பேன். ஈரமும் பிசுபிசுப்பான உணர்வும் இருந்தால், மாதவிடாய் வந்துவிட்டது என்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்.

சானிட்டரி நாப்கின்களைச் சரியாக உள்ளாடையில் வைப்பது என்பது முற்றிலும் தசை நினைவாற்றல் (Muscle Memory) சார்ந்ததுதான். வீட்டில் உள்ளவர்களோ அல்லது பள்ளியில் உள்ள ஆசிரியர்களோ ஒருமுறை சொல்லிக் கொடுத்தால் போதும், அதன் பிறகு தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் அது பழகிவிடும்.

இதில் பெரிய சிரமம் எதுவும் இல்லை. என்னுடைய இரத்தப்போக்கின் அளவு எந்த அளவுக்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அதற்கேற்ப, உறிஞ்சும் தன்மை கொண்ட நாப்கின்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவேன்.

அனைத்துப் பெண்களுக்கும் சில சமயங்களில் ஆடைகளில் கசிவதைப் போல, எனக்கும் கசிவது சகஜம்தான். ஆனால், ஒருவேளை தவறுதலாக உடையில் கறை படிந்துவிட்டால், அந்த நேரங்களில், பார்வையுள்ளவர்கள் எங்களை நடத்தும் விதத்தை எதிர்கொள்வதுதான் சவாலான ஒன்று.

ஒரு சிலர், "இந்த நேரத்தில ஏன் வெளிய வருகிறீர்கள்?" என்று கேட்பார்கள். ஒரு சிலர், ஏதோ எங்களுக்கு மட்டும்தான் ஆடையில் கசிவதுபோல், பரிதாபமாக பார்த்துவிட்டுச் செல்வார்கள். உதவ மட்டும் முன்வரமாட்டார்கள். பொதுவாக, அனைத்துப் பெண்களாலும் தங்களுடைய இரத்தப்போக்கின் அளவை உணர முடியும் அல்லவா, அதே உணர்வு எனக்கும் இருக்கும். நாப்கின் கனமாகிவிட்டதை உணர்ந்தால், உடனடியாகச் சென்று மாற்றிக்கொள்வேன். பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை அப்புறப்படுத்துவதும் ஒரு முக்கியமான விஷயம்.

(8ஆம் பக்கம் பார்க்...)

இந்த சமூகத்தின் தயக்கத்தால், மாதவிடாய் என்றால் என்ன என்று ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி தெரிவதில்லை. பார்வையுள்ள ஆண்களுக்கு, நாப்கின் விளம்பரங்களின் வழியாகவோ, பிறரை கவனிப்பதன் மூலமாகவோ மாதவிடாயை பற்றி ஒரு அடிப்படை புரிதலாவது இருக்கும்.

# உக்ரைன் உடனான போரை 50 நாட்களில் நிறுத்தாவிட்டால் ரஷ்யாவுக்கு 100% வரி விதிக்கப்படும்: டிரம்ப் எச்சரிக்கை

உக்ரைன் உடனான போரை 50 நாட்களில் நிறுத்தாவிட்டால் ரஷ்யாவுக்கு 100மூ வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்க அதிபரான டிரம்ப் சர்வதேச அளவில் நிலவும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர முயன்று வருகிறார். மத்தியக் கிழக்கில் இஸ்ரேலை சுற்றி நிலவிய பதற்றத்தைத் தணிக்கக் கூட அவர் பெரியளவில் முயற்சி செய்தார். கடந்த மாதம் இஸ்ரேல் ஈரான் இடையே போர் வெடித்த போதும் கூட அதை முடிவுக்குக்கொண்டு வர முயன்றதாக டிரம்ப் கூறியிருந்தார்.

அதேநேரம் ரஷ்யா உக்ரைன் மோதலைப் பல காலமாக முடிவுக்குக் கொண்டு வர அவர் முயன்று வருகிறார். ஆனாலும், புதின் இந்த விவகாரத்தில் பிடி கொடுக்க மறுத்தே வருகிறார். கடந்த 2022ம் ஆண்டு ஆரம்பித்த ரஷ்யா உக்ரைன் மோதல் ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து வருகிறது. உக்ரைன் மோதலை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா உடன்படவில்லை என்றே கூறப்படுகிறது. இதற்கிடையே உக்ரைனுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இந்நிலையில், உக்ரைன் போரை 50 நாட்களில் முடிவுக்கு கொண்டு வராவிட்டால் ரஷ்யா மீது கடுமையான வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார். இது குறித்து டொனால்டு டிரம்ப் கூறியதாவது புதினின் செயல்பாடுகள் ஏமாற்றம் அளிக்கிறது. அடுத்த 50 நாட்களுக்குள் உக்ரைன் உடன் போர் நிறுத்தத்திற்கு புதின் ஒப்புக் கொள்ளாவிட்டால் ரஷியா மீது கடுமையான வரிகள் விதிக்கப்படும். நாங்கள் 2ம் கட்ட வரிகளை விதிக்க திட்டமிட்டு வருகிறோம்.



எங்களுடன் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் வரி 100 சதவீதம் விதிக்கப்படும் என்றார். (ஐ)





# புறப்பட்ட சிறிது நேரத்தில் லண்டனில் விமானம் கீழே விழுந்து விபத்து: 4 பேர் உயிரிழப்பு

இங்கிலாந்தின் லண்டனில் உள்ள சவுத்என்ட் விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டுச்சென்றது. இந்த விமானம் நெதர்லாந்தின் லெலிஸ்டாட்டுக்கு செல்ல இருந்தது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானம் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. விமானம் தீப்பிடித்து எரிந்ததால் அந்த பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு குழுவினர் தீவிர மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 4 பேர் பலியாகினர். விமான விபத்து காரணமாக விமான நிலையத்தில் இருந்து புறப்படும் மற்றும் விமான நிலையத்திற்கு வரும் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டன.


## தொழிலாளர்கள் பற்றாக்குறை எதிரொலி 10 லட்சம் இந்திய ஊழியர்களை பணியமர்த்த ரஷ்யா முடிவு

மாஸ்கோ: ரஷ்யாழுஉக்ரைன் இடையேயான போர் மூன்று ஆண்டுளாக நீடித்து வருகின்றது. இதனால் ஏராளமான தொழிலாளர்கள் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பல்வேறு பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இந்திய தொழிலாளர்களை கொண்டு காலி பணியிடங்களை நிரப்புவதற்கு ரஷ்யா முடிவு செய்துள்ளது.

இதன்படி அதிக தொழில்மயமாக்கப்பட்ட பகுதிகளில் தொழிலாளர் பற்றாக்குறையை சரி செய்வதற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் பத்து லட்சம் இந்திய தொழிலாளர்களை ரஷ்யா பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் ஸ்வெர்ட்லோவ்ஸ்க் உட்பட இந்தியாவில் இருந்து 10லட்சம் திறமைவாய்ந்த தொழிலாளர்கள் வருவார்கள். இந்த விவகாரத்தை கையாளுவதற்கான யெகாடெரின்பர்க்கில் புதிய துணை தூதரகம் திறக்கப்படுகின்றது

இதேபோல் இலங்கை மற்றும் வடகொரியாவில் இருந்து தொழிலாளர்களை அழைப்பது குறித்தும் ரஷ்யா பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யா தொழிலாளர் அமைச்சகமானது 2030ம் ஆண்டுக்குள் 31லட்சம் தொழிலாளர்களை பற்றாக்குறையை எதிர்க்கொள்ள கூடும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டு வெளிநாட்டு தொழிலாளர்களை அழைப்பதற்கான ஒதுக்கீட்டை 1.5மடங்கு அதிகரித்து 2.3லட்சமாக உயர்த்த வேண்டும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ஐ)

# ரஷ்யாவில் தங்கப் பற்கள் கட்டியிருந்த 100 பெண்களை கடத்தி பலாத்காரம் செய்து கொன்ற கொடூர தாத்தா சிக்கினான்



ரஷ்யாவில் தங்கப் பற்கள் கட்டியிருந்த 100 பெண்களை கடத்தி பலாத்காரம் செய்து கொன்ற கொடூரன் 12 ஆண்டுக்கு பிறகு சிக்கிய பரபரப்பு பின்னணி தகவல்கள் வெளியாகி உள்ளது. ரஷ்யாவின் 'ஓர்ஸ்க்மனநோயாளி' என்று அழைக்கப்படும் லாரி டிரைவர் வலேரி ஆண்ட்ரேவ்(67), கடந்த 2006 முதல் 2012ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் பெரும் பீதியை ஏற்படுத்தி வந்தான். தனியாகச் செல்லும் பெண்களுக்கு லிஃப்ட் கொடுப்பது போல் லாரியில் ஏற்றிக்கொண்டு, அவர்களை ஆள்நடமாட்டம் இல்லாத இடங்களுக்குக் கடத்திச் சென்று, பாலியல் பலாத்காரம் செய்து கொடூரமாகக் கொலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். குறிப்பாகத் தங்கப் பற்கள் கட்டியிருந்த பெண்களையே குறிவைத்துத் தாக்கிய இவன், அவர்களைக் கொன்ற பிறகு, அந்தத் தங்கப் பற்களைப் பிடுங்கி எடுத்துக்கொள்வான்.

சுமார் 100க்கும் மேற்பட்ட பெண்களை இவன் கொன்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், கடந்த 12 ஆண்டுகளாக போலீஸ் பிடியில் சிக்காமல் தலைமறைவாக வாழ்ந்து வந்தான். இந்த நிலையில், ரஷ்யாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள கரேலியா என்ற இடத்தில், மீனவர் என்ற போர்வையில் புதிய அடையாளத்துடன் வாழ்ந்து வந்த வலேரியை, டிஎன்ஏ பரிசோதனை மூலம் காவல்துறையினர் சமீபத்தில் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர். அவனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், எந்தவிதப் பதற்றமோ, குற்ற உணர்வோ இன்றி அமைதியாக இருந்த அவன், குறைந்தது 100 பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து கொன்றதாகப் பகீர் வாக்குமூலம் அளித்துள்ளான். இந்த வாக்குமூலம் ரஷ்யா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

திருமணமாகி இரண்டு மகன்கள் உள்ள குடும்பத் தலைவனாக வாழ்ந்து கொண்டே, மறுபுறம் இப்படி கொடூர சீரியல் கில்லராக வலம் வந்த அவனது இரட்டை வாழ்க்கை அனைவரையும் திகிலில் ஆழ்த்தியுள்ளது. தற்போது விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கும் அவன், தான் கொலை செய்து புதைத்த பெண்களின் உடல்களைக் காவல்துறையினருக்கு அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறான். முதற்கட்டமாக 8 கொலைகளுக்கு அவன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த எண்ணிக்கை பல மடங்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 12 வருடங்களாக நீடித்த ஒரு மர்மத்திற்குத் தற்போது விடை கிடைத்துள்ளதாக போலீஸ் அதிகாரிகள் கூறினர். (ஐ)

### கொழும்புத்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றும் சிறைக் காவலாளியின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த நபர் ஒருவர் ஜேர்மன் நாட்டில் இருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

மேற்படி நபர் சகோதரி குடும்பத்தினருடன் முரண்பட்டு, சகோதரியின் கணவருடனும் முரண்பட்டுள்ளார்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை அவர், தனது சகோதரன் மற்றும் நண்பர்கள் என 10 பேருடன் மது அருந்தியுள்ளார்.

அவ்வேளை, ஏற்கனவே முரண்பட்ட சகோதரியின் கணவரின் நண்பர் அவ்வழியே சென்ற வேளை நிறை போதையில் இருந்த கும்பல் அந்த இளைஞரை வம்புக்கு இழுத்துத் தர்க்கம் புரிந்து, மண்வெட்டிப் பிடி, கூரிய ஆயுதங்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞரை அயலவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தாக்குதலாளிகள் அனைவரும் தலைமறைவாகியுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், ஜேர்மன் நாட்டில் இருந்து வந்த நபர் மீண்டும் ஜேர்மன் நாட்டுக்குச் செல்லாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கவனயீர்ப்பை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்கள், எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மொஹமட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த மொஹமட் சுஹைல்என்ற 21வயது இளைஞரை மவுண்ட்லவேனியா நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

இன்றைய நீதிவான் நீதிமன்ற அமர்வின் போது பொலிஸார் மொஹமட் சுஹைலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இதன்போது இலங்கை பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்து ஆஜராகிய தெகிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மொஹமட் சுஹைலைப் பிணையில் விடுதலை செய்யலாம் என்ற சட்டமா அதிபரின் பரிந்துரையை நீதிமன்றத்திடம் கையளித்தார்.

இதனைக் கருத்தில் எடுத்த நீதிவான் மொஹமட் சுஹைலைப் பிணையில் விடுதலை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இவர் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இஸ்ரேலியத் தூதரகத்துக்கு அருகில் கைது செய்யப்பட்டார். முதலில் இவரை அடையாள அட்டை வைத்திருக்காததால் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இவர் இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்டிக்கரை ஒட்டினார் எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். எனினும், நீதிமன்றம் இவரை விடுதலை செய்தது.

அதன் பின்னர் இவர் இன்ஸ்டகிராமில் இஸ்ரேலியக் கொடி காலால் மிதிக்கப்படும் படத்தைப் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

### எங்களுக்குள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

"தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி பல்வேறுபட்ட உறுதிமொழிகளை வழங்கி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. அதில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்பதும் புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்படும் என்பதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்பதும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமான உறுதிமொழிகளாக இருந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஏறத்தாழ பத்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இந்த உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளோ நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், நாங்கள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவோம் என்றும், புதிய யாப்பைக் கொண்டு வருவோம் என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்றும் தொடர்ச்சியாகப் புராணம் போல் ஓதி வருகின்றார்கள்.

தற்போது முதல்முறையாக எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியும் என்று மாகாண சபைகள் அமைச்சர் சந்தன அபேரத்தன தெரிவித்திருக்கின்றார்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் எல்லை மீள்நிர்ணயம் செய்தபோதும்கூட அது மலையக தமிழ் மக்களினதும் இஸ்லாமிய மக்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கணிசமான அளவில் குறைக்கின்றது என்ற அடிப்படையில் எல்லை நிர்ணய சபையால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணய முடிவுகள் கைவிடப்பட்டன.

பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி மாகாண சபைகளை இயங்க வைத்துக்கொண்டு புதிய தேர்தல் முறைமை, எல்லை மீள்நிர்ணயம் போன்றவற்றைச் சமகாலத்தில் செய்யலாம் எனத் தமிழ் மக்கள் வலியுறுத்தியும்கூட அதனை மைத்திரி அரசாங்கமோ ரணில் அரசாங்கமோ கண்டுகொள்ளவில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நாங்கள் பதவிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவோம் என்று கூறிய போதிலும், முன்னர் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் கூறியவற்றையே எவ்வித சொல் வேறுபாடுமின்றி கூறத் தொடங்கிவிட்டது. தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பலர் இந்த அரசாங்கத்தை நம்பி மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும், புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றும் கனவுலகில் சஞ்சரிப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது ஆட்சியில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் அடுத்த நான்கு வருடங்களை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பதுதான் அவர்களது சிந்தனையே தவிர, பிரச்சினைக்குரிய விடயங்களில் அவர்கள் தலைபோடத் தயாராக இல்லை. இதனை தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த்தரப்புகள் ஒன்றுபட்டு காத்திரமான அழுத்தங்களை அரசாங்கத்துக்குச் செலுத்தாத வரையில், மாகாண சபைத் தேர்தல்கள் என்பது ஒரு கானல் நீராகவே இருக்கும். அடிப்படையில் தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரப் பகிர்வில் விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றனர். கடந்த காலங்களில் அவர்களது நாடாளுமன்ற உரைகளும், அவர்களது தொடர் நடவடிக்கைகளும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானதாகவே இருந்து வந்துள்ளது.

இலங்கை போன்ற நாட்டுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமற்றது என்றும், அது ஒரு வெள்ளையானைக்குத் தீனி போடுவதைப் போன்று அநாவசிய செலவு என்றும் இவர்கள் பிரச்சாரம் செய்தவர்கள். வடக்கு - கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்வதற்காக நீதிமன்றம் வரை சென்று அதை நிறைவேற்றியவர்கள். இத்தகையவர்கள் தாமாக முன்வந்து மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளிக்கதைக்கு ஒப்பானது.

இந்தநிலையில், தமிழ் மக்கள் தங்களுக்கான அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் மாகாண சபைத் தேர்தலும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாகவும் சரியாகவும் நிறைவேற்ற வேண்டியதும் அதிமுக்கியமானது.

குறைந்தபட்சம் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற அதிகாரங்களைக் கையில் எடுப்பதன் ஊடாகவே வடக்கு - கிழக்கைப் பாதுகாக்க முடியும் என்பதுடன் வடக்கு - கிழக்கில் அரசாங்கம் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகளையும் ஓரளவிற்காவது நிறுத்த முடியும்.

அதிகாரங்கள் கையில் இல்லாத காரணத்தினால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகத் தான் நினைத்த அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நாம் வெளிப்படையாகவே பார்த்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, இவற்றை நாம் ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அதற்கான அதிகாரங்கள் என்பது முக்கியமானது.

இப்பொழுது எமது கைவசம் இருப்பது மாகாண சபையும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதற்கு அளித்திருக்கும் அதிகாரங்கள் மாத்திரமே. எமக்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரையில் இருக்கின்ற மாகாண சபை அதிகாரங்களை எடுத்துக்கொண்டு இயன்றவரை தமிழ் மண்ணையும் மக்களையும் காப்பாற்றிக்கொண்டு அடுத்த கட்டம் நோக்கி நகர்வதே புத்திசாலித்தனமானது. இவை பற்றி பேசி ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதே இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் முக்கியமானது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது.

மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாகவும் அதில் இருக்கின்ற குறை நிறை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்பூட்டும் முகமாக மக்களுடன் கலந்துரையாடுவதற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. அது மாத்திரமல்லாமல், அனைத்து மட்டங்களிலும் இருக்கக்கூடிய தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் அக்கறையுள்ள புத்திஜீவிகளுடனும் சமூக செயற்பாட்டாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பத்துமாதங்கள் கடந்துவிட்ட நிலையில், தாமும் ஏனைய ஆளும் தரப்பினர்களைப் போன்றவர்களே என்ற தமது உண்மை முகத்தைக் காட்டத் தொடங்கிவிட்டனர்.

தமிழ் மக்களாகிய நாம் மேற்படி விடயங்களைப் புரிந்துகொண்டு நமக்கிருக்கும் அதிகாரத்தைக் கையகப்படுத்திக்கொண்டு எமது இலக்கை நோக்கி முன்னோக்கிச் செல்ல முயற்சிக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்பார்க்கின்றது."

- என்றுள்ளது.

### மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எமது ஆட்சி இருந்திருந்தால் மஹிந்தவைக் கிழட்டு மைனா எனவும், நாமலைக் குட்டி மைனா எனவும் தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்திருப்பார்கள். அன்று எம்மை இப்படி விமர்சித்தவர்களுக்கு மக்கள் இன்று சமூக வலைத்தளங்களில் சிறப்பான பதிவுகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியினருக்கு ஆட்சியை வழங்கியது நல்லது. இப்போது யதார்த்தம் புரிந்திருக்கும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு எமது கட்சி ஆதரவாளர்களே காரணம். அவர்களும் உண்மையைப் புரிந்துகொண்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவை விரைவில் களத்துறைக்கு அழைத்து வருவேன்." - என்றார்.

## வலி. வடக்கைச் சேர்ந்த பொது மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் போராட்டம்!

வடக்கில் ராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் இன்றையதினம் அமைதிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தை யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பொது மக்கள் முன்னெடுத்ததுடன், வடக்கு மக்களுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் இனி ஒருபோதும் வரப்போவதில்லை என கூறும் படையினரிடம், அதி உயர் பாதுகாப்பு வலையங்களை ஏன் வைத்திருக்கின்றீர்கள் என்பதற்கு பதிலில்லை. வடக்கில் உள்ள பொது மக்கள் அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும். யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும், அங்குள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இது வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்நிலையிலேயே இன்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்துள்ளோம்- எனத் தெரிவித்திருந்தார்.

## வைத்தியர் மகேஷி விஜேரத்னவுக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 15

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்னவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று செவ்வாய்க்கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

வைத்தியர் மகேஷி விஜேரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்தியர் மகேஷி விஜேரத்னவை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மருந்துகளை மூன்றாம் தரப்பின் ஊடாக அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்ன இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உணர்வுகளின் உலகம்....

நான் வழக்கமாகப் பயன்படுத்தும் இடத்தில் குப்பைத் தொட்டி எங்கு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அதனால், நாப்கின்களைக் காகிதத்தில் சுற்றி, குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவேன். ஆனால், பொதுக் கழிப்பறைகளில் இது மிகவும் சங்கடமான காரியம். அங்கு குப்பைத் தொட்டி எங்கு இருக்கிறது என்று தேடுவது, அதைப் பயன்படுத்துவது, அப்புறப்படுத்துவது எல்லாம் கொஞ்சம் சவாலான விஷயம்தான். பொதுவாகவே எனக்கு ஒரு பழக்கம் உண்டு. மாதவிடாய் நாள்களில் நான் அடிக்கடி கழிப்பறைக்குச் சென்று, உள்ளாடையில் ரத்தம் கசிந்திருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துச் சரிபார்த்துக்கொள்வேன். தொட்டுப் பார்த்தாலே ஒருவித உணர்வு ஏற்படும் அல்லவா, அதைக் கொண்டு என் உள்ளாடையை மாற்றிவிட்டு வந்துவிடுவேன்.

இரவு நேரங்களில் எனக்கு சில சமயங்களில் அதிகமாக இரத்தப்போக்கு ஏற்படுவதுண்டு. அது போன்ற சமயங்களில் காலையில் எழுந்ததும், முடிந்தவரை துணிகளைச் சற்று அதிகக் கவனம் எடுத்துத் துவைத்துப் போட்டுவிடுவேன்.

இந்தச் சங்கடங்கள் அனைத்தும் எனக்கு மென்ஸ்ட்ருவல் கப் (ஆநளெவசரயட ஊரி) பற்றித் தெரிய வரும் வரைதான். எனக்கு மென்ஸ்ட்ருவல் கப் பற்றித் தெரிய வந்த பிறகு, அதைத்தான் பயன்படுத்தி வருகிறேன். அது குறித்துத் தெரிந்துகொண்டதில் இருந்து இந்தச் சங்கடங்கள் எதுவும் எனக்கு இல்லை. இது மிகவும் சௌகரியமாக இருக்கிறது.

பயணங்களின் போதுகூட இதைப் பயன்படுத்துவதற்கு மிகவும் எளிதாக இருக்கிறது. இப்போது பொது கழிப்பறையில் குப்பைத் தொட்டி எங்கிருக்கிறது என்று யாரிடமும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

'பெண்களுக்கு பொதுவாக வெள்ளைப்படுதல் இருக்கும். அதற்கும் மாதவிடாய்க்கும் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பீர்கள்?' என்று ஒரு சிலருக்கு சந்தேகம் வரலாம், கேட்க கொஞ்சம் அருவருப்பாக இருந்தாலும், நான் அப்படித்தான் சமாளிக்கிறேன்.

அது என்னவென்றால், தொட்டுப் பார்க்கும்போது பிசுபிசுப்பாக இருந்தால், அது மாதவிடாய். அப்படி இல்லை என்றால், அது வெள்ளைப்படுதல். அவ்வளவுதான்.

மாதவிடாய் நாட்களில் என்னுடைய உடைகளை நான் தான் துவைப்பேன். 'அது எப்படி?' என்று நீங்கள் கேட்கலாம். துணிகளைத் தண்ணீரில் ஊற வைத்தால்கூட, தொட்டுப் பார்க்கும்போது கறை படிந்திருக்கும் பகுதிக்கும் மற்ற பகுதிக்கும் வித்தியாசம் தெரியும். அதை வைத்து, அந்தக் கறைகள் இருக்கும் இடங்களில் சற்று அதிகக் கவனம் செலுத்தித் துவைத்து விடுவேன். அப்படி ஒருவேளை தெரியாவிட்டாலும், எங்கெல்லாம் மாதவிடாய்க் கறை படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நமக்குத் தெரியும் அல்லவா? அந்தப் பகுதிகளில் கொஞ்சம் கூடுதல் கவனம் எடுத்து துவைத்துவிடுவேன்.

பார்வை என்பது இந்த உலகத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு வழிதான், ஆனால் அதுவே எல்லாமே இல்லை. மற்ற உணர்வுகள் மூலமாகவும், அனுபவம் மூலமாகவும் நாங்கள் நிறையக் கற்றுக்கொள்கிறோம்.

பார்வை இல்லாததாலேயே ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் காலத்தைச் சமாளிப்பது கடினம் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. சரியான பயிற்சி, புரிதல், மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் துணை கொண்டு, அனைத்துப் பெண்களைப்போலவே நாங்களும் எங்கள் மாதவிடாய் காலத்தை எவ்விதச் சிரமமும் இன்றி எதிர்கொள்ள முடியும்.

# 'புலிகளின் குரல்' வானொலியின் பிரபல அறிவிப்பாளர் காலமானார்!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் 'புலிகளின் குரல்' வானொலியின் பிரபல அறிவிப்பாளராகச் செயற்பட்ட சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) மாரடைப்பால் காலமானார். 1990 ஆம் ஆண்டில் புலிகளின் வானொலி தொடங்கி முதலாவது செய்தி ஒலிபரப்பாகியபோது "புலிகளின்குரல் – செய்திகள் வாசிப்பவர் சத்தியா" என்று செய்தி வாசித்தவர் அவர், புலிகளின் குரல் வானொலியில் செய்தி ஆசிரியராகவும், செய்தி வாசிப்பாளராகவும் 2003 ஆம் ஆண்டு வரையில் அவர் செயற்பட்டிருந்தார்.

அவருடைய செய்தி வாசிப்புப் பாணியை வைத்து செய்தியின் கனதி தொடர்பில் மக்கள் உணரக்கூடிய அளவுக்கு அவருடைய அறிவிப்பு தனித்துவம் பெற்றிருந்தது.

நிதர்சனம் நிறுவனத்தில் மாதாந்தம் வெளியாகிய ஒளிவீச்சு காணொளிச் சஞ்சிகையில் தொடர்ந்து மாதாந்தம் இடம்பெற்ற "சமகாலப் பார்வை" என்ற நிகழ்ச்சிக்கான குரல் வழங்குபவராக நீண்டகாலமாக அவர் செயற்பட்டார்.

நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் நேர்காணலுடன் ஒளிபரப்பாகிய "விடுதலைத் தீப்பொறி" என்கின்ற நிகழ்ச்சியின் குரல் வழங்குநராகவும் அவர் செயற்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளையொட்டி நிதர்சனம் நிறுவனம் தயாரித்த "தலைநிமிர்வு 50" என்ற ஆவணப்படம் உட்பட்ட ஏராளமான ஆவண வெளியீடுகளின் பிரதான குரல் தொகுப்பாளராகவும் அவர் புகழ் பெற்றிருந்தார். இடப்பெயர்வுக்கு முன்னர், நிதர்சனம் நிறுவனத்தினரை யாழ்ப்பாணத்தில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் பின்னர் முள்ளியவளையில் புலிகளின் குரல் வானொலி செயற்பட்ட 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரால் அவர் மதிப்பளிப்பளிக்கப்பட்டார்.

புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய வரலாற்றுத் தொடரான "காலச்சக்கரம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து, மறைந்த கலைஞர் சங்கநாதனுடன் இணைந்து சத்தியா குரல் வழங்கியிருந்தார்.

விவசாயம் சார்ந்த கருப்பொருளை உள்ளடக்கிய "மண்முற்றம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து அதில் அவர் குரல் வழங்கியும் இருந்தார்.

மக்களின் குரலாக ஒலித்த "ஊர் சுற்றும் ஒலிவாங்கி" என்ற நேர்காணல் நிகழ்ச்சியைப் புலிகளின் குரல் வானொலியில் அவர் தயாரித்திருந்தார்.

2003 ஆண்டிலிருந்து ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கிய அவர் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்திருந்தார்.

அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கிக் காயமடைந்த அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார். இந்நிலையில் மாரடைப்பால் நேற்று அவர் காலமானார். அவரின் இறுதிக்கிரியை நிகழ்வு கிளிநொச்சி, வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2025 வெளியிடப்பெற்றது.